# தென்காசி நகராட்சி
# 18.06.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள்: 1**

தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் EAP II 15/04/2010ம் தேதிய அரசு ஆணை எண்.103 மற்றும் 02/06/2010ம் தேதியிட்ட சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித எண்.46163/07/எச்3 யில் மக்கள் நல்வாழ்வு நலத்திட்டடத் தேசீய நகர நலத்திட்டத்தில் இந்நகராட்சியில் நகர்நல மையஙகள் செயல்படுத்த வரப்பட்ட அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக கடித நகல்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள்: 2</u>**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித எண் 43184/09/பி4 நாள் 26/10/09ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒரு டிப்பர் லாரி வாங்க அனுமதிக்கப்பட்டது, மேற்படி உத்திரவில் புதிதாக வாங்கப்படும் லாரிக்கு பணியேற்பாடாக ஓட்டுநரை நியமித்துக்கொள்ள வேண்டும் எனவும், இல்லாதபட்சத்தில் TEXCO ( முன்னாள் படைவீரர் அலுவலகம்) அலுவலகத்தை தொடர்பு கொள்ள தெரிவிக்கப்பட்டதன்படி அலுவலக கடித எண் 1020/சி1/10/நாள்28/4/10.ன்படி பட்டியல் கேட்கப்பட்டது, அதன்படிமுன்னாள் படைவீரர் நிறுவன (டெக்ஸ்மோ) கடித எண் AM/NP1/ MUNICIPAL/TKS/TIN10/ நாள் 13/5/10ன்படி பெறப்பட்ட விபரப்படி ஒரு ஓட்டுநருக்கு கீழ்ககண்ட விபரப்படி எட்டு மணி நேரத்திற்கு மாதம் ஒன்றுக்கு உதியம் ரூ.8396/ வழஙகவேண்டியுள்ளது

| Particulars | Supervisor/Driver/J Assist 8 Hrs/per shift pm Rs |
|---|---|
| RATE<br>Service charges @ 12% | 6796.00<br>815.52 |
| SUB TOTAL | 7611.52 |
| SERVICE TAX 10.36%<br>ON GRANT TOTAL | 783.99<br>8.395.51 OR 8396/ |

மேலும் நகராட்சியால் புதிதாக ஓட்டுநர் நியமனம் செய்தால் புதிய ஊதியக்குழுப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.10340/ வழஙகவேண்டும், TEXCO மூலம் ஓட்டுநரைT பணியமர்த்தினால் ரூ.8390/ வழங்கப்படவேண்டும், இது புதிய

நியனத்தைவிட ஊதியம் குறைவாக உள்ளதால், TEXCO மூலம் ஓட்டுநர் பணியிடம் நிரப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மேற்படி பொருள் பற்றி மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>மன்றப்பொருள்: 3</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 3 ஆண்டுகள் அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 23.04.2010ல் நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண். | ஏலக்கேள்விதாரர் பெயர் மற்றும் முகவரி | மாத வாடகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | புதிய பேரூந்து நிலைய கடை எண். 7 | 1) எல்.கிருஷ்ணன்,<br>105/177, கீழப்பாளையம்<br>தென்காசி | 730 |
| | | 2) எம்.முகைதீன் பாத்திமாள்<br>29/54, கடையத்தெரு,<br>தென்காசி | 625 |

அ.கு மேற்படி இனத்திற்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.730/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய மாதவாடகை ரூ.702/-ஐ விட கூடுதலாக உள்ளதால் மேற்படி கடைக்கு மாத வாடகை ரூ.730/- கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எல். கிருஷ்ணன் என்பவருக்கு மேற்படி கடை 7ஐ ஒப்படைக்க மன்றம் முடிவு செய்யலாம். (ந.க.எண்.388/09/அ2)

**மன்றப்பொருள்: 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் கொள்கை வளர்க்க தமிழ் பகுத்தறிவு புத்தகஙகளை விற்பனை செய்ய இட ஒதுக்கீடு செய்து தரும்படி ஏ. நடராஜன் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார். இம்மனு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் வழியாக இவ்வலுவலகத்திற்கு

வரப்பெற்றுள்ளது. ந.நி.ம.கு.வ(நதி4) துறையின்அரசாணை (2ப) எண்.120, நாள்.10.07.2007 உத்திரவின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்துப் பேரூந்து நிலையஙகளிலும் இரண்டு பெட்டி கடைகள் ஒதுக்கீடு செய்து அக்கடைகளில் தமிழ் நூல்கள் மட்டுமே விற்பபன செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழஙகப்படும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.200/- அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகை தொகையில் நான்கில் ஒரு பஙகு இவற்றில் எது குறைவோ அதனை பொதுஏலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம் என்று ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி தற்பொழுது புதிய பேரூந்து நிலையத்தில் கடை ஒன்றிற்கு உயர்ந்த பட்ச வாடகை தொகை ரூ.6,745/- ஆகும். அதில் நான்கில் ஒரு பஙகு ரூ.1,686/- ஆகும்.

எனவே புதிய பேரூந்து நிலையத்தில் பெட்டி கடைகள் வைத்து தமிழ்நூல்கள் மட்டுமே விற்பனை செய்ய மனுதாரருக்கு முன்னுரிமை அளித்து இட ஒதுக்கீடு செய்யவும், வாடகை நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (1448/10/அ2)

**மன்றப்பொருள்: 5**

புதிய மருத்துவகாப்பீட்டு திட்டம், நகராட்சி பணியாளர்ககக்கு 03.06.2008 முதல் அமுல்படுத்தப்பட்டு, 2 ஆண்டு ஆகிறது. அடுத்து ஆண்டிற்கு 03.06.2010 முதல் மேற்படி காப்பீட்டு திட்டத்திற்கு 1 பணியாளருக்கு ஜூன் 2010 முதல் மே 2011 முடிய 1 ஆண்டு காலத்திற்கு பிரிமீயத்தொகை ரூ.495/- மற்றும் சேவைக் கட்டணம் 12.36% ஐ அரசு கணக்கில் செலுத்த ஆகும் உத்தேச செலவு ரூ.95,000/-க்கு (170 பணியாளர்களுக்கு) மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு 1 மேற்படி மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு செலுத்த வேண்டிய 1 ஆண்டு பிரிமீயத் தொகையை பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியில் இருந்து வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 6**

இந்நகராட்சி நகர்மன்ற அரஙகிற்கு கவுன்சிலர்கள் குஷன் சேர்கள், வி.ஐ.பி. குஷன் சேர்கள் சப்ளை செய்ய ரூ.2.10 லட்சத்திற்கு 31.03.2010ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 25.05.2010 அன்று கோரப்பட்ட ஒப்பந்த புள்ளிகளில் கலந்து கொண்ட நிறுவனஙகள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளி விபரஙகள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
|---|---|---|---|
| | | கவுன்சிலர் குஷன் சேர் 1க்கு (ரூ) | வி.ஐ.பி. குஷன் சேர் 1க்கு (ரூ) |
| 1 | சஙகரன்கோவில் சர்வோதயா சஙகம், சஙகரன்கோவில் | 4,600 | 9,300 |
| 2 | விஸ்வகர்மா தொழிலாளர்கள் தச்சு மற்றும் விற்பனை சஙகம், அருப்புக்கோட்டை | 4,850 | 9,475 |

அ.கு 1 மேற்படி இரண்டு நிறுவனஙகளும் 23.04.2010ம் தேதி டெபாசிட் தொகையாக தலா ரூ.1,500/- செலுத்தியுள்ளார்கள்.

2 பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளில் சஙகரன்கோவில் சர்வோதயா சஙகம், சஙகரன்கோவில் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 7**

தென்காசி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மீது " தமிழ் வாழ்க" என்ற சொல் பொறித்த மின் ஒளி பலகை நிறுவ அரசு ஆணை (நிலை) எண்.101 நாள்.03.06.2010ம் தேதியில் ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி மின் ஒளி பலகை 12"அடி நீளமும், 3" அடி அகலத்திற்கும் குறையாததாகவும் ஒளிரும் எழுத்துக்களை கொண்டும் , பொதுமக்கள் பார்வைக்கு நன்றாக தெரியும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேற்படி அரசாணயின்பப இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மீது " தமிழ் வாழ்க" என்ற சொல் பொறித்த மின் ஒளி பலகை நிறுவ உத்தேச செலவு தொகை ரூ.40,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காண் அரசு ஆணையில் இந்த மின் ஒளிப்பலகை 27.06.2010 முதல் செயல்படதக்கவாறு அமைக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (1853/10/இ1)

**<u>மன்றப்பொருள்: 8</u>**

தென்காசி நகராட்சி பொதுநிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 76 நாள்.25.02.2010 ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 26.05.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3 ரயில்வே கேட் முதல் களக்கோடி தெருவரை தார்தளம் அமைத்தல் | 3.00 | 1) கருப்பையா<br>2) எஸ். சுடலைமுத்து | 0.09%குறைவு<br>0.50% கூடுதல் |

அ.கு: 1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.50 % குறைவாக கொடுத்துள்ள டி. கருப்பையா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2) மழைக்காலம் ஆரம்பம் ஆகுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 9</u>**

தென்காசி நகராட்சி பொதுநிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 76 நாள்.25.02.2010 ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 26.05.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மேலமாசி வீதி , வடக்குமாசி வீதி, தெருக்களில் தார்தளம் அமைத்தல் | 8.00 | 1) கருப்பையா<br>2) எஸ். சுடலைமுத்து | 0.01%குறைவு<br>0.20% கூடுதல் |

அ.கு: 1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.01 % குறைவாக கொடுத்துள்ள டி. கருப்பையா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

2) மழைக்காலம் ஆரம்பம் ஆகுவதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வாஙகியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 10**

தென்காசி நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண்.125 நாள்.13.08.2008ல் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு 2க்கென குப்பைகள் அப்புறப்படுத்த லாரி இல்லாத காரணத்தினால், தனியார் ஒப்பந்தக்காரர் மூலம் ஓட்டுநர் மற்றும் துப்புரவு பணியாளர் உட்பட லாரி ஒன்றினை நடை ஒன்றுக்கு ரூ.300/ - வீதம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தனியார் லாரியினை நகராட்சிக்கென புதியலாரி வாங்கும் வரை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக் கொள்ளவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது நகராட்சிக்கென புதிய லாரி ஒன்று வாங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி லாரியினை இயக்குவதற்கு ஓட்டுநர் பணியிடம் இல்லாததால், மேற்படி லாரியினை இயக்குவதற்கு தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் ஒருவரை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே புதிய லாரியினை இயக்குவதற்கு ஓட்டுநர் ஒருவர் பணியமர்த்தப்படும் வரை மேற்படி தனியார் லாரியினை குப்பைகள் அப்புறப்படுத்துவதற்கு தொடர்ந்து பயன்படுத்த மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 11**

2009-10ம் ஆண்டு சுவர்ணஜெயந்தி சமுதாய கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சுகாதார விழிப்புணர்ச்சி நாடகம் நடத்த, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித எண்.9479/04/சி1 நாள்.19.03.2010ல் பரிந்துரை செய்துள்ளபடி திருச்சியை சேர்ந்த திருமலை நாடக சபா மூலம் சுகாதார விழிப்புணர்ச்சி நாடகம் நடத்தவும் தெரிவித்துள்ளார்கள். அதன்படி 1 நாடகத்திற்கு ரூ.4,000/- வீதம் நாடகம் நடத்த ஆகும் செலவுத் தொகையை சுவர்ணஜெயந்தி சமுதாய கட்டமைப்பு மான்யத் தொகையில் இருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழஙகலாம்.

**மன்றப்பொருள்: 12**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 76 7993 ஈப்பு வாகனத்தின் பழுதினை சரிசெய்ய இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் **10.05.2010**ம் தேதி முன்அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி **25.05.2010**ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (அரசு அஙகீகாரம் பெற்றது) | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | எஸ்.ஜி. ஜெயராஜ் நாடார் & சன்<br>**176**/பி, திருவனந்தபுரம் ரோடு,<br>பாளையஙகோட்டை | 51,975 |
| 2 | கொடை கார்ஸ் (பி) லிட்,<br>**176**/ஏ/7, திருவனந்தபுரம் ரோடு,<br>பாளையஙகோட்டை | 47,510 |

அ.கு **1** மேற்கண்ட ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் **2**ல் கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 13**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜீப் வாகனம் TN 76 7993ன் கீழ்க்கண்ட பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ.**48,000**/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. இஞ்சின் ஆயில், ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்ற வேண்டும்.
2. 4 வீல்களிலும் பழுதான பேரிஙகுகளை மாற்ற வேண்டும்.
3. ஜாய்ண்ட் கிராஸ், யோக் & டீத் அசெம்பிளி மாற்ற வேண்டும்.
4. ஸ்பிரிங பிளேட் புஷ்கள் மாற்ற வேண்டும்.
5. முன்பக்கம் சஸ்பென்சர் வேலைகள் செய்ய வேண்டும்.
6. வீல் அலெய்ண்மெண்ட் சரிபார்க்க வேண்டும்.
7. சீட் கவர்கள் மாற்ற வேண்டும்.
8. புல் சர்வீஸ் செய்ய வேண்டும்.

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.

**2** குடிநீர் பிரிவு வாகனம் என்பதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**3** மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(1616/10/இ1)**

**மன்றப்பொருள்: 14**

இந்நகராட்சியில் பல்வேறு திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திட்ட பணிகளுக்கான திட்ட பிரேரணைகள் அனுப்பவும், அவ்வப்போது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநூர் அலுவலகம் மற்றும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் ஆகியவைகளுக்கு பெரிய அளவிலான புகைப்படங்கள் மற்றும் பிரேரணைகள் அனுப்பப்பட்டு வருகின்றன. மேற்படி புகைப்படங்கள் , ஒளி நகல்கள் மற்றும் புத்தக வடிவிலான (Spiral Binding) பிரேரேனை தயார் செய்யவும், மேற்கண்ட பணிகளை அடிக்கடி மேற்கொள்ள வேண்டியிருப்பதால் ஒரு வருட காலத்திற்கு உத்தேச செலவு தொகை ரூ.50 ஆயிரத்துக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(1866/10/இ1)**

**மன்றப்பொருள் :15**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் உள்ள காலிமனைகளுக்கு 01.10.2009 முதல் காலிமனைவரி திருத்தம் செய்து அமுல்படுத்த தெரிவித்து வந்துள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.151 நாள்.20.08.2009ன் படியும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்1 நாள். 07.09.2009ன் பிரகாரம் ஏற்கனவே அமுலில் இருந்து வரும் காலிமனை மூலதன மதிப்பில் நூற்றுக்கு (இவ்வளவு) விழுக்காடு என்று விதிக்கப்பட்டு வந்த முறையை மாற்றப்பட்டு நிலத்தின் பரப்பளவின் அடிப்படையில் வரி நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டது.

அதன்படி மனை அமைவிடம் மற்றும் மண்டலத்தின் அடிப்படையாக கொண்டு நகர்மன்ற தீர்மான எண்.219 நாள்.13.11.2009ன்படி அரசாணை மற்றும் சுற்றறிக்கையினை பதிவு செய்தும், “அ” மண்டலம் சதுர அடிக்கு 0.20 பைசா எனவும் “ஆ” மண்டலம் சதுர அடிக்கு 0.25 பைசா எனவும் “இ” மண்டலம் சதுர அடிக்கு 0.35 பைசா எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 30.11.2009ம் தேதிய கடித ந.ககஎண்.57811/2009/ஆர்1 கடிதத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு தெளிவுரை வழஙகப்பட்டுள்ளது.

(1) காலிமனை வரிவிதிப்பில் பழைய வரி விதிப்பினை மாற்றி தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அரசு ஆணைப்படி 01.10.2009 முதல் திருத்திய வரிவிதிப்பு செய்து வசூலிக்கப்பட வேண்டும். 01.10.2009க்கு முன்பு ஏற்கனவே உள்ள கேட்பின் அடிப்படையில் வரிவசூலிக்கப்படவேண்டும். புதிய அரசு ஆணைப்படி கேட்பு முந்தைய வரிவிதிப்பை விடக் குறைவாக இருப்பினும் அதனையே வசூலிக்க வேண்டும்.

(2) காலிமனை வரியானது, வரிவிதிப்பு செய்யப்படும் அரையாண்டுக்கான வரியையும் சேர்த்து 13 அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படவேண்டும். பத்திரம் 13 ஆண்டுகளுக்கு முன்பு பதியப்பட்ட நிகழ்வில் மட்டுமே இது பொருந்தும். மற்ற இனஙகளில் பத்திரம் பதிவு செய்த நாளில் இருந்துதான் காலிமனை வரிவிதிப்பு செய்யப்படவேண்டும்.

(3) இதுவரை காலிமனை வரிவிதிப்பு செய்யாத அனைத்து இனஙகளுக்கும் தற்சமயம் வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையின்படி காலிமனைவரி நிர்ணயிக்கப்படவேண்டும்.

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரின் 19.03.2010ம் தேதிய சுற்றறிக்கையின் ந.க.எண்.41802/2009/ஆர்1ல் காலிமனை வரிவிதிப்பு செய்வதில் 01.10.2009க்கு முன்னர் விதிக்கப்படும் காலிமனைகளுக்கு (13) அரையாண்டுகளில்) முன்னர் கடைபிடிக்கப்பட்ட (மூலதன மதிப்பீட்டிலும்) 01.10.2009க்கு பின்னர் சதுர அடி அடிப்படையிலும் காலிமனை வரிநிர்ணயம் செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1 சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் 19.03.2010ம்தேதிய ந.க.எண்.41802/09/ஆர்1 சுற்றறிக்கையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (2662/2009/அ1)

**மன்றப்பொருள்: 16**

இந்நகராட்சி மூலம் தமிழ்நாடு புதிய சட்டப்பேரவை கட்டிட திறப்பு விழாவினை முன்னிட்டு மாலை மலரின் சிறப்பு மலரில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.14,500/- க்கான (144034 நாள் 11.03.2010) பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 17</u>**

தென்காசி நகராட்சி குடிநீர்நிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 111 நாள்.31.03.2010 ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 31.05.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியிலிள்ள அடிபம்புகளை பழுது நீக்கம் செய்தல் | 1.35 | 1) எம்.கே.அப்துல்ரசாக்<br>2) எஸ். சுடலைமுத்து | 0.02%குறைவு<br>0.63% கூடுதல் |

அ.கு: 1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.02 % குறைவாக கொடுத்துள்ள எம்.கே.அப்துல்ரசாக் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 18</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 U 0687 டேங்கர் லாரிக்கு புதிய பேட்டரி வாஙக இந்நகர்மன்ற தீர்மானம் எண்.211 நாள். 28.05.2010ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 11.06.2010ம் தேதி அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் (அரசு அஙகீகாரம் பெற்றது) | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | இம்பீரியல் பேட்டரி சர்வீஸ்,<br>1பி, மேலமாசி வீதி, தென்காசி | 6,500 |
| 2 | பழனியப்பா ஆட்டோ ஸ்பேர்ஸ்,<br>யானைப்பாலம் அருகில், தென்காசி | 6,600 |

அ.கு 1 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (1514/10/இ1)

**மன்றப்பொருள்: 19**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியிலுள்ள தெருவிளக்குகளை ஒளிரச் செய்யவும், அணைக்கவும் தனியார் தெருவிளக்கு பணியாளர்கள் மூலம் செய்வதால் ஏற்படும் காலதாமதத்தினால் மின்செலவு கூடுதலாகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு தானியஙகி சுவிட்ச் (Jeimer Switch) பொருத்த வேண்டுமென இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைக்கேற்ப தற்பொழுது 82 இடஙகளுக்கு முதற்கட்டமாக மேற்படி சுவிட்ச்களை பொருத்த உத்தேச செலவு தொகை ரூ.6.56 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1881/10/இ1)

**மன்றப்பொருள்: 20**

இந்நகராட்சிக்கு எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு (ரேசன் கடை எதிர்புறம்) எல்58 முதல் எல் 89 மற்றும் எல்1 முதல் எல்11 வரையிலான சாலைகள் போடப்பட்டு பல வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மிகவும் மோசமான நிலையில் குண்டும், குழியுமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மேற்படி சாலையினை தார்சாலையாக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2.75 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1882/10/இ1)

**மன்றப்பொருள்: 21**

இந்நகராட்சியில் சொத்துவரி, தண்ணீர் கட்டணம், தொழில்வரி மற்றும் பல்வகை கேட்புகளுக்கான வசூல் பணிக்கு கணனிகள் இந்நகராட்சி Server கணனி மூலமாக பழைய பேருந்து நிலைய கணினியுடனும், தென்காசி இந்தியன் வஙகி (புதிய குடிநீர் குழாய் இணைப்பு பெறுவதற்கு) கணினியுடனும் மற்றும் இந்நகராட்சி Server கணனிக்கு வெப்சைட் இணைப்பு கிடைப்பதற்காக திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கணனியுடனும் பி.எஸ்.என்.எல் நிறுவனம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி பி.எஸ்.என்.எல் நிறுவனத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள 3 கணனி இணைப்புகளுக்கு வருடாந்திர வாடகை (01.04.2010 முதல் 31.03.2011 வரை ) ரூபாய் 11259+20402+770) = 38831/- செலுத்த திருநெல்வேலி பி.எஸ்.என்.எல் நிறுவனம் பொது மேலாளர் அவர்களின் கடித எண்.A/TRA/CCT-BLG/10-11 Dated at Tirunelveli 627003 the -03-2010ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருநெல்வேலி பி.எஸ்.என்.எல்., நிறுவனத்திற்கு தொகை ரூ.38,831/-ஐ செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1885/10/இ1)

**மன்றப்பொருள்: 22**

இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்த விபரத்தினை தினமணி தொழில்மலர் 2010ல் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.12,000/-க்கான பட்டியல் (IAF 15251 நாள்.01.04.2010) வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (1368/10/இ1)

**மன்றப்பொருள்: 23**

இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்த விபரத்தினை வணக்கம் இந்தியா நெல்லை மாவட்ட சிறப்பு மலரில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.17,600/-க்கான பட்டியல் (IAF 492 நாள்.19.03.2010) வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (1368/10/இ1)

**மன்றப்பொருள்: 24**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் ஊர்க்காடு தலைமை நீரேற்ற நிலையத்திலிருந்து மன்னார் கோவில், திருமலையப்பபுரம், மாதாபுரம் மற்றும் தென்காசி நீருந்து நிலையங்கள் மூலம் குடிநீர் பம்பிங செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு சுமார் எட்டு வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அதிலுள்ள மின் மோட்டார்கள், மின் இணைப்புகள் பியூஸ் போர்டுகள், புட் வால்வு டிஸ்குகள், கேட் வால்வு ரோப், ஸ்டாட்டர்கள் ஆகியவை பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி பழுதினை நீக்கவும் , பராமரிக்கவும் உத்தேச செலவு தொகை ரூ.2.35 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1740/10/இ1)

**<u>மன்றப்பொருள்: 25</u>**

தென்காசி நகராட்சி குடிநீர்நிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 111 நாள்.25.02.2010 ல் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 19.03.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியிலுள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்தல் | 3.00 | 1) எஸ்.முத்துசுப்பிரமணியன்<br><br>2) எஸ். சுடலைமுத்து | மதிப்பீட்டுத் தொகை<br><br>12.81% கூடுதல் |

அ.கு: 1) மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு கொடுத்துள்ள எஸ்.முத்துசுப்பிரமணியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 26**

இந்நகராட்சியில் 12வது நிதிக்குழு திட்ட பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளிகள் விபரத்தினை தினமணி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.7,079/- க்கு (பட்டியல் எண். IAF/14916/04.03.2010) வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (1879/10/இ1)

**மன்றப்பொருள்: 27**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள “5” பிவிசி பிரதான குழாய் மதுரை ரோடு உழவர் சந்தை அருகிலுள்ள பாலத்தில் உடைந்து குடிநீர் வெளியே சென்று கொண்டிருப்பதை சரிசெய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.1,400/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1884/10/இ1)

**மன்றப்பொருள்: 28**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட குலசேகரநாதர் தெரு மற்றும் கீழமுத்தாரம்மன் கோவில் தெருக்களில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் சீராக கிடைப்பது இல்லை. ஆகையால் திருநெல்வேலி ரோட்டில் உள்ள பிரதான குழாயிலிருந்து "3" வால்வு பொருத்தி மேற்படி வீடுகளுக்கு சீரான குடிநீர் வழஙக உத்தேச செலவுத் தொகை ரூ.2,800/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1883/10/இ1)

**மன்றப்பொருள்: 29**

இந்நகராட்சியில் குடிநீர் நிதி பணிகள் 2009-10ம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை " தினமுரசு" தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.2,056/- க்கு (பட்டியல் எண். 425 நாள்.25.04.2010) வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம். (1878/10/இ1)

**மன்றப்பொருள்: 30**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 Y 4567 ஈப்பு வாகனத்தின் பழுதினை சரிசெய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.35,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்ம்

**மன்றப்பொருள்: 31**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு குற்றாலம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீரில் கிருமி நாசினி (குளோரினேஷன்) கலக்கப்படுகிறது. மேலும் அவ்வாறு விநியோகிக்கப்படும் குடிநீர் தரமானதாகவும், குடிப்பதற்கேற்ப இதமானதாகவும் இருக்க வேண்டுமெனவும் அவ்வப்போது குடிநீரின் தரத்தினை மாதம் ஒருமுறை ஆய்வுக் கூடங்களில் சோதனை செய்யப்பட வேண்டுமென திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வுக் கூடங்களில் தெரிவித்துள்ளார்கள். அதன்படி திருநெல்வேலி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலக ஆய்வுக் கூடங்களில் சோதனை மேற்கொள்ள மாதம் ஒன்றிற்கு ரூ.1,500/- வீதம் 1 வருட காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ.20 ஆயிரத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி குடிநிர் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆய்வுக் கட்டணம் ரூ.1,400/- செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (3919/09/இ1)

**மன்றப்பொருள்: 32**

இந்நகராட்சியில் மாநில நிதிக்குழு – உள்கட்டமைப்பு வெற்றிடம் நிரப்பும் நிதி திட்டம் 2007-08ம் ஆண்டின் கீழ் நகராட்சி அலுவலகம் கட்டும் பணி ரூ.30.00 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இப்பணி தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலையில் அலுவலக கட்டிடத்திற்கு தேவையான முகப்பு பகுதி (Elevation) அழகுற அமைக்கவும், False Cealing, Flooring Tiles அலுமினிய தடுப்புகள் முதலிய பணிகள் மேற்கொள்ளவும், வர்ணங்கள் அழகுற அமைக்கவும், உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 நகர்மன்ற தீர்மான எண். 86 நாள்.25.02.2010ம் தேதியன்று அலுவலகக் கட்டிடத்திற்கு கூடுதலாக அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 18.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்ட தீர்மானம் ரத்து செய்யப்பட்டு புதிதாக கூடுதலாக ரூ.20.00 இலட்ச மதிப்பீட்டில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3 மேற்படி கூடுதல் மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1335/10/இ1)

**மன்றப்பொருள்: 33**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான 10வது வார்டு நகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூபாய் 7.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1923/10/இ1)

**மன்றப்பொருள்: 34**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான 7வது வார்டு நகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூபாய் 7.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1922/10/இ1)

**மன்றப்பொருள்: 35**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.21 அனுமந்தபுரம் தெருவில் (சிற்றாறு போகும் வழியில்) ஆழ்துளை கிணறுடன் கூடிய பிளாஸ்டிக் டேங்க் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1924/10/இ1)

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

## <u>தென்காசி நகராட்சி</u>

## <u>18.06.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்</u>

| மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 222 | பதிவு செய்யப்பட்டது |
| 2 | 223 | தமிழ்நாடு அரசு பொது பணித் துறை விலைவிபர அட்டவணை 2009-2010 ம் ஆண்டின் படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 149/- என கனரக வாகன ஓட்டுனருக்கு நீர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4470/- ஆகிறது. டெக்ஸ்கோ என்ற நிறுவனத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் ரூபாய் 8390/- என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விலை விகிதத்தினை ஒப்பிடும் பொது அரசு பொதுபணி துறை விலை விகிதம் குறைவாக உள்ளது. எனவே நகராட்சி நிதி கூடுதல் செலவினை தவிர்க்கும் பொருட்டு அரசு பொதுபணித்துறை விலை விதிதத்தில் நடவடிக்கை கொள்ள மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது |
| 3 | 224 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 225 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 226 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 227 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 228 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 229 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 230 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 231 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 232 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 233 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 234 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 235 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 15 | 236 | நகர்மன்ற தீர்மான எண்.219 நாள். 13.11.09ன்படி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. |
| 16 | 237 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 238 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 239 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 240 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 241 | அனுமதிக்கப்பட்டது |
| 21 | 242 | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 243 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 244 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 245 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 246 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 247 | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 248 | அனுமதிக்கப்பட்டது |
| 28 | 249 | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 250 | அனுமதிக்கப்பட்டது |
| 30 | 251 | அனுமதிக்கப்பட்டது |
| 31 | 252 | அனுமதிக்கப்பட்டது |
| 32 | 253 | அனுமதிக்கப்பட்டது |
| 33 | 254 | அனுமதிக்கப்பட்டது |
| 34 | 255 | அனுமதிக்கப்பட்டது |
| 35 | 256 | அனுமதிக்கப்பட்டது |

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.